நாளதுவரை விண்ணப்பம் எதுவும் பெறப்படவில்லை. ஏதும் விண்ணப்பம் இனி பெறப்பட்டால் அது பள்ளிக் கல்வி இயக்குநரால் பரிசீலனை செய்யப்படும்.

முந்திரி ஆலைத் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச கூலி.

* வினா எண். 466—திரு. தே. ஞானசிகாமணி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தமிழ் நாட்டிலுள்ள 137 முந்திரி ஆலைகளில் உள்ள 75 ஆயிரத்துக்கு மேற்பட்ட தொழிலாளர்களுக்கு குறைந்த பட்ச கூலி அமுல்படுத்துவதில் காலம் கடத்துவது ஏன்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தமிழ்நாட்டிலுள்ள முந்திரி ஆலைகளுக்கு, வேண்டிய அளவு மூலப்பொருள் (கச்சா முந்திரி) கிடைக்காததால் பெரும்பாலான முந்திரி ஆலைகள் இயங்கவில்லை. இதனால் தொழிலாளர்கள் பலர் வேலையின்றி உள்ளனர். தொழிலின் நலனைக் கருதியும், இப்பொழுது வேலையிலிருந்து வரும் தொழிலாளர்களுக்கு தொடர்ந்து வேலை கிடைக்க வேண்டுமென்பதாலும் குறைந்த அளவு ஊதியம் நிர்ணயிக்கும் நடவடிக்கை ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

திரு. தே. ஞானசிகாமணி : தலைவரவர்களே, ஒரு ஆண்டுக்கு இரண்டு மாத வேலைதான் கிடைக்கிறது. அப்படிக் கழிந்த இரண்டு ஆண்டுகளாக, அந்த வேலையில்கூட ஒரு ரூபாய் முதல் இரண்டு ரூபாய்தான் சம்பளம் கிடைக்கிறது. பல்வேறு தொழில்கள் ஏற்படுத்தப்படுவதற்கு இந்தத் தொழில் ஏற்படுத்துவதன் காரணத்தால் முதலாளிக்கு அதிக இலாபம் கிடைக்க வசதியாக இருக்கிறது. ஆகவே, கொஞ்ச நாள் வேலை கொடுத்தாலும் கூட அதற்குத் தகுதியான சம்பளம் கிடைக்கும் அளவிலே இந்தத் தொழிலிலே மினிமம் வேஜ் ஏற்படுவதற்கு அமைச்சரவர்கள் முன் வர வேண்டுமென்று கேட்டு, முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் ; பேரவைத் தலைவரவர்களே, மத்திய அரசு தென் மாநிலங்களிலுள்ள முந்திரித் தொழிற்சாலைகளின் பிரச்னைகளைப்பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க மத்திய தொழிலாளர் நல இலாகா கூட்டுச் செயலாளர் தலைமையில் ஒரு குழுவை ஏற்படுத்தியுள்ளது. அக்குழுவின் அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது. அதன் பின்னர் ஏற்ற நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவரவர்களே, முந்திரித் தொழில் நல்ல ஏற்றுமதி செய்யக்கூடிய தொழில். இதற்கு மூலப்பொருளான முந்திரிக்கொட்டை கிடைப்பதில் சிரமமாக

1979 மார்ச் 19]

இருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆப்பிரிக்காவிலிருந்து நிறைய முந்திரிக் கொட்டையை இறக்குமதி செய்ய எந்தவிதமான சிரமமும் கிடையாது. ஆகையினாலே அந்தத் தொழில் நல்ல வளர்ச்சி அடையவும், தொழிலாளர்களுக்கு நிரந்தரமாக வேலை கிடைக்கவும் இறக்குமதி செய்வதிலே தடையில்லை. அந்த ஃபாக்டரி சொந்தக்காரர்கள் நிறைய இறக்குமதி செய்து, தொழிலாளர்களுக்கு நல்ல ஊதியம் கிடைக்க அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வி குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயிப்பதைப் பற்றி. குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயிக்கப் படவில்லையென்ற காரணத்தாலே தொழிலாளர்கள் ஊதிய உயர்வு பெற முடியாது என்பதல்ல. அந்தந்தத் தொழிற்சாலையில் உள்ளவர்கள், ஊதியம் அதிகமாகக் கேட்டு, முதலாளிகளோடு பேசி—வெற்றிபெற்று, ஒப்பந்தம் செய்தால் நல்லது. ('வெல் அன்ட் குட்') ஒப்பந்தம் ஏற்படவில்லையென்றால், தொழில் தகராறு எழுப்பினால்' அதை 'கன்சிலியேஷ்'னுக்கு அனுப்ப—சமரச முயற்சியில் அரசு தேவையானால் முயற்சி செய்யும். அதிகம் வெற்றி பெறவில்லையென்றால், தொழில் மன்றத்திற்கு அனுப்புவது பற்றியும் அரசு ஆராயும்.

திரு. என். கிட்டப்பா : பேரவைத் தலைவரவர்களே, பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள், சிந்திரித் தொழில் வளர்கிறது வடக்கே; முந்திரித் தொழிலும் சிதைகிறது தெற்கே என்று. அதை அடிப்படையாக வைத்து,—மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளைப் பற்றி அறிவித்தார்கள்,—பேரறிஞர் அண்ணா அவர்கள் முந்திரித் தொழில் கூட இங்கே சிதைந்து கொண்டிருக்கிறது என்று எடுத்துக் காட்டியதற்கிணங்க, அந்த முந்திரித் தொழில் வளர தகுந்த நடவடிக்கைகளை அரசு எடுக்க முன் வருமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தைப் பொறுத்தமட்டில் போதுமான கச்சாப் பொருள் இல்லை. கேரளத்திலிருந்து தமிழகத்திற்கு முந்திரி வருவதற்குத் தடையிருக்கிறது. மத்திய அரசில் இருக்கக்கூடிய 'காஷு கார்ப்பரேஷ'னுக்கு எழுதியதில் அதிகமாக நமக்குக் கொடுக்க இயலாது என்று எழுதிவிட்டார்கள். இதற்கிடையில் உச்ச நீதிமன்றத்தில் இந்தத் தடையை எதிர்த்து கேரள மாநிலத்திற்கு வெளியே உள்ள முந்திரி பயன்படுத்துவோர் ஒரு வழக்கு தொடர்ந்ததால், அத்தடையை நீக்குவது குறித்து கேரள அரசுடன் தொடர்புகொள்ள இயலாது எனவும் மத்திய அமைச்சர் தனது 6–6–1978-ல் தனது கடிதத்தில்

கூறியுள்ளார். தமிழ்நாட்டிலேயே மூலப்பொருள் உற்பத்தியைப் பெருக்க விவசாயத் துறையையும் வனநீர் வளத் துறையையும் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, மூலப்பொருள் பற்றாக்குறையினால் முந்திரிப்பருப்புத் தொழிலாளர்கள் பிரச்னை தீர்வதற்கு வழியில்லாத ஒரு காரணத்தை மாண்புமிகு அமைச்சரவர்கள் இங்கே கூறினார்கள். சென்ற மாதம் வெளி நாட்டிலிருந்து நமக்குத் தேவையான அளவுக்கு முந்திரிக்கொட்டை இறக்குமதி செய்வதாக பத்திரிகையில் பார்த்தேன். இறக்குமதி செய்தாலும் கூட, அது கேரளாவுக்குப் போகிறதே தவிர, தமிழ்நாட்டில் இருக்கிற ஆலைகளுக்குப் பயன்படத்தக்க விதத்தில் நமக்குக் கூட கிடைக்கவில்லை. ஆகவே, மாண்புமிகு அமைச்சரவர்கள் ஏற்கனவே மத்திய அரசு மறுப்பு தெரிவித்து இருக்கிறது என்று கூறினாலும் கூட மீண்டும் அதனை வலியுறுத்தி கன்னியாகுமரி மாவட்டத்திலிருக்கிற ஏறத்தாழ 150 பாக்டரிகளுக்குத் தேவையான முந்திரிப்பருப்பை. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; கேள்வியை, சுருக்கமாக ஜேம்ஸ் கேட்கமுடியவில்லையா? சுருக்கமாகச் சொல்லுங்கள்.

திரு. ஜே. ஜேம்ஸ் : நேரடியாக பெறுவதற்குள்ள முயற்சியை அரசு முற்கொள்ளுமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே, நான் முன்பே தெரிவித்ததைப் போல் இது குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயிப்பதைப் பற்றியதாகும். இருப்பினும் மத்திய அரசு ஏற்பாடு செய்துள்ள குழுவினுடைய பரிந்துரையைப் பார்த்து, இந்த அரசு அதன்மேல் முடிவு எடுக்கும் என்பதை மீண்டும் வலியுறுத்திச் சொல்கிறேன்.

திரு. தே. ஞானசிகாமணி : அமைச்சரவர்கள் பதில் சொல்லும் போது தொழில் ஜாஸ்தியாக இல்லாத காரணத்தால் 'மினிமம் வேஜஸ்' தேவையில்லையென்றும் அவர்கள் போராடி வாங்கினால் பரவாயில்லை என்றும் பொருள்படக் கூறினார்கள். போராடி வாங்குவது வேறு விஷயம். வேலைக்கு அடிப்படை சம்பளத்தை நிர்ணயித்து அமுலுக்குக் கொண்டு வரவேண்டியது அரசினுடைய கடமை. அப்படிக் கொண்டு வந்தால் முதலாளிகள் தொழிலாளர்கள் ஒரளவாவது சம்பளத்தைக் கொடுப்பார்கள். அதோடு கூட, தமிழகத்திலே 13,000 டன் முந்திரி உற்பத்தி கிடைப்பதாகச் சொன்னார்கள். அதை இன்னொரு கார்ப்பரேஷன் மூலமாக லைசன்ஸ் எடுத்து அங்கேயிருக்கிற 137 பாக்டரிகளுக்குத் தொழிலாளர்கள் எண்ணிக்கையின் அடிப்படையில் பகிர்ந்து கொடுக்க அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

1979 மார்ச் 19]

[முற்பகல் 9.30]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்; பேரவைத் தலைவர் அவர்களே, நான் தொழிலாளர்கள் போராட வேண்டும் என்று சொல்லவில்லை. குறைந்த பட்ச ஊதியத்தை நிர்ணயிக்கவில்லை என்று சொல்லும்போது, ஊதிய உயர்வு பெற முடியாது என்பது அல்ல. ஊதிய உயர்வு எந்தெந்த வழிகளில் ஏற்படுத்த வேண்டும் என்று சொன்னார்கள். பேரவைத் தலைவர் அவர்கள் சுருக்கமாக பதில் சொல்ல வேண்டும் என்று அடிக்கடி சொல் கிறார்கள். ஆனால், கேள்வியை மட்டும் நீட்டமாகக் கேட்க அனுமதிக்கிறார்கள். குறைந்த பட்ச ஊதியம் நிர்ணயிப்பதில் நிறையச் சிரமம் இருக்கிறது. குறைந்த பட்ச ஊதியம் நிர்ண யித்து விட்டால், அந்த ஊதிய நிர்ணயம் கொடுக்கப்பட வில்லை என்று சொன்னால், அந்த நிறுவனம் இருக்கத் தேவை யில்லை என்று வழக்கு மன்றம் (case law) தீர்ப்பளித்திருக்கிறது.

An industry which is not in a position to pay the minimum wage prescribed by the Government has no right to exist என்று இருக்கிறது. இவைகளை எல்லாம் மனதில் கொண்டு தான் நாங்கள் இதை ஆலோசனை செய்கிறோம் என்று தெரி வித்துக் கொள்கிறேன்.

திரு. சி. ஆறுமுகம் ; தலைவர் அவர்களே, பாயிண்ட் ஆப் ஆர்டர் சார்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; கேள்வி நேரத்தில் பாயிண்ட் ஆப் ஆர்டர் என்ன?

திரு. சி. ஆறுமுகம் ; தலைவர் அவர்களே, நமது மாண்பு மிகு அமைச்சர் அவர்கள் பதில்சொல்லும்போது, பேரவைத் தலைவர் அவர்கள் கேள்வியை மட்டும் நீட்டிக் கொண்டு போக அனுமதிக்கிறார்கள் என்று சொன்னார்கள். பேரவைத் தலைவர் நீட்டிக்கவில்லை. உறுப்பினர்கள் நீட்டிக்கிறார்கள். அது அவர்கள் உரிமை, அவர்களை அதற்கு அனுமதிப்பது தலைவர் அவர்களின் கடமை. அதனால், பேரவை தலைவர் நீட்டிக் கொண்டு போக அனுமதிக்கிறார் என்று சொன்னதைக் குறிப் பேட்டிலிருந்து எடுத்துவிட வேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதனால் பரவாயில்லை. அனுபவம் உள்ள உறுப்பினர்கள் சுருக்கமாகப் பேசவேண்டும் என்று சொல்கிறேன். திரு. ஞானசிகாமணி அவர்கள் புதிய உறுப்பினர், பெரியவர், அதனால் அவரை கேட்க அனு

மதித்தேன். இனிமேல் யாரையும் அனுமதிக்கப் போவதில்லை. அனுபவம் உள்ளவர்கள் சுருக்கமாகக் கேள்வி கேட்கவேண்டும். அமைச்சரவர்கள் அதைவிடச் சுருக்கமாகப் பதில் சொல்ல வேண்டும்.

திரு. ஜே. ஜேம்ஸ் ; தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஊதியத்தைப் பற்றி எல்லாம் சொன்னார்கள். இந்த முந்திரி பருப்புத் தொழிலில் வேலை செய்கிற தொழிலாளர்களுடைய கையில் அதன் பால் பட்டு பல காயங்கள் ஏற்படுகிறது. அது பல வியாதிகளுக்கும் மூல காரணமாக இருக்கிறது. ஆகவே இந்த முந்திரித் தோட்ட தொழிலாளர்களுக்கு அரசு தனியாக பாதுகாப்பு ஏற்படுத்தி தருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் ; பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி குறைநத பட்ச ஊதியம் நிர்ண யிப்பதில் காலதாமதம் ஏன் என்பதாகும். மாண்புமிகு உறுப் பினர் அவர்கள் தனிக் கேள்வி போடும்படி கேட்டுக் கொள் கிறேன்.

திரு. க. சுப்பு ; பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் குறைந்த பட்ச ஊதியம் நிர்ணயிப்பதில், மற்ற முந்திரித் தோட்டத் தொழிலாளர்களை விட சேர்வராயன் மலையிலுள்ள முந்திரித் தோட்ட தொழிலாளர்களுக்குக் குறைவாக இருக்கிறது என்றும் அதை ஒரே சீராக மாற்றியமைக்க வேண்டும் என்றும் கோரிக்கைகள் வந்திருப்பதாகத் தெரிகிறது. அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, மூலக்கேள்விக்கும் இதற்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை. இருந்தாலும், நான் அது விஷயமாகத் தான் இன்று காலை 8.20-லிருந்து 8.32 வரையில் பேசிவிட்டு வந்திருக்கிறேன் என்று சொல்லிக் கொள்கிறேன்.

திரு. க. மருதாசலம் : தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் 137 முந்திரி ஆலைகள் இருப்பதாக இந்த அறிக் கையில் பார்க்கிறோம். இந்த 137 முந்திரி ஆலைகள் தமிழ் நாட்டில் எந்தெந்த மாவட்டங்களில் இருக்கின்றன, அப்படி இல்லாத மாவட்டங்களில் ஒரு முந்திரி ஆலை அரசின் சார்பில் நிறுவ முயற்சி எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் ; தலைவர் அவர்களே, தனிக்கேள்வி போடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

1979 மார்ச் 19]

திரு. மு. அம்பிகாபதி ; தலைவர் அவர்களே, தமிழகத்தில் 137 முந்திரித் தொழிற்சாலைகளும், 76,000-க்கு மேற்பட்ட தொழிலாளர்களும் இருக்கிறார்கள். அவர்களுக்கு மினிமம் வேஜஸ் (குறைந்த பட்ச ஊதியம்) என்ன என்பதை அரசாங்கம் அறிவிக்கவில்லை என்று தெரிகிறது. அந்தத் தொழிலாளர்களுக்குக் கூலி நிர்ணயம் செய்யும் போது அந்தத் தொழிலில் இருக்கின்ற முறைகளைப் பரிசீலித்து, அதிலே பால் பட்டு காயம் அடைவது மற்றும் உள்ள சிக்கல்களைப் பரிசீலித்து, அதிலே இருக்கிற பல்வேறு அம்சங்களைக் கணக்கில் எடுத்துக் கொண்டு, கூலி நிர்ணயிப்பது தான் வழக்கம். அமைச்சர் அவர்கள் அதற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை என்று சொன்னார்கள். ஆகவே, முந்திரித் தொழிலாளர்களுக்கு உள்ள குறைகளைப் பரிசீலித்து, குறைந்த பட்ச ஊதியம் நிர்ணயிக்க அதைக் குறித்து பரிசீலிக்க, ஒரு கமிட்டி அமைத்து, அவர்களை இது குறித்து சிந்தனை செய்ய அரசு ஆணையிடுமா?

மாண்புமிகு திரு. எஸ், இராகவானந்தம் ; தலைவர் அவர்களே, மத்திய அரசு ஒரு குழுவை ஏற்கனவே அமைத்து இருக்கிறது. அது தன்னுடைய வேலையைச் செய்துகொண்டு இருக்கிறது. குழுவின் அறிக்கை வந்தபிறகு நடவடிக்கை எடுக்கப்படும் என்று முன்னதாகவே கூறிவிட்டேன். மாண்புமிகு உறுப்பினர் அந்த நேரத்தில் இங்கே இல்லை என்று கருதுகிறேன்,

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; திரு. மு. அம்பிகாபதி, தாங்கள் துணை வினா கேட்க 3 நிமிடம் எடுத்துக்கொண்டு விட்டீர்கள்.

நல்லான்குப்பம் குடிசைக் பகுதியில் மராமத்துப் பணிகள்

* வினா எண். 467— திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) சென்னை அசோக்நகர் பகுதியிலுள்ள நல்லான் குப்பம் குடிசை மாற்று வாரியப் பகுதியிலுள்ள கழிவு நீர்க் குழாயில் அடைப்பு ஏற்பட்டு அப்பகுதியில் சுகாதாரம் கெடுவதால் அதை உடனே சீர் செய்வது குறித்து குடியாத்தம் தொகுதி சட்டப்பேரவை உறுப்பினரது 17-7-1978 தேதியிட்ட மனு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக் கைகள் யாவை?